Narcotics Anonymous®

நார்காடிக்ஸ் அனானிமஸ்

IP No. 2-TA

# குழு

# குழு

## வரையறை மற்றும் நோக்கம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நலமடைந்து வரும் அடிக்டுகள் அடிக்சன் என்கிற நோயிலிருந்து நலமடையும் நோக்கத்திற்காக ஒரு குறிப்பிட்ட நேரம் மற்றும் இடத்தில் தவறாமல் சந்திக்கும் எந்தவொரு இடமும் நார்காடிக்ஸ் அனானிமஸ் குழு எனப்படும். அனைத்து நார்காடிக்ஸ் அனானிமஸ் குழுக்களும் NA வின் பன்னிரண்டு வழிமுறைகள் மற்றும் பன்னிரண்டு கோட்பாடுகளால் பிணைக்கப்பட்டுள்ளன. இன்னமும் அடிக்சனால் அவதிப்பட்டுக். கொண்டிருப்பவர்களுக்கு NA - வின் செய்தியை எடுத்து செல்வதே ஒவ்வொரு குழுவின் அடிப்படை நோக்கமாகும்.

நமது முதன்மையான நோக்கத்தை நினைவில் கொள்வது முக்கியம், இதனால் முதல்முறையாக மீட்டிங்கு வரும் அடிக்டுகள் மீட்டிங்கில் மற்றவர்களுடன் தொடர்புபடுத்தி அடையாளம் காண முடியும். போதைப்பொருட்கள் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்ற விருப்பம் உள்ள புதிய நபருக்கும் மற்றும் ஏற்கனவே உள்ள உறுப்பினர்களுக்கும் நலமடைதலுக்கான சூழ்நிலையை உருவாக்குவது அந்த குழுவின் ஒரு முக்கிய பொறுப்பாகும். புதியநபர்கள் இங்கே வரவேற்கப்படுகிறார்கள் என்று அவர்கள் உணர வேண்டும் என்பதை நாங்கள் விரும்புகிறோம். முதன் முதலில் NA க்கு நாம் வந்தபோது எவ்வளவு பயத்தோடும் கவலையுடனும் இருந்தோம் என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ளலாம். அந்த ஆரம்ப புன்னகையை நாங்கள் வரவேற்றோம் மற்றும் நாம் தனிமையை உணர்ந்த போது அந்த எளிமையான அன்பான அரவணைப்பு உலகில் எல்லா வித்தியாசங்களையும் ஏற்படுத்தியதை கற்று கொண்டோம். நமது உணர்வுகளையும் அனுபவங்களையும் புரிந்து கொள்வதற்கு நம்மை போல இருக்கும் மற்றவர்களை கண்டுபிடிப்பது அவசியமானது. சுத்தமாக இருந்து கொண்டு NA வின் செயல்திட்டதின்படி வாழ்ந்து கொண்டிருக்கும் முன்மாதிரியாக விளங்கும் மற்றவர்களை பின்பற்றுவதன் மூலம் சுத்தமாக இருக்க முடியும் என்பதை ஆரம்பத்தில் இருந்தே நாம் கண்டோம்.

நம்பிக்கையின் செய்தியையும் போதைப்பொருட்கள் பயன்படுத்துவதிலிருந்து விடுபடுவதற்கான உறுதிமொழியையும் சுமந்து செல்லும் மிக சக்திவாய்ந்த வாகனம் இந்த குழு. எந்தவொரு அடிக்டும் போதைப்பொருட்களை பயன்படுத்துவதை நிறுத்தலாம், போதைப்பொருட்களை பயன்படுத்தும் விருப்பத்தையும் இழக்கலாம், மேலும் புதிய மற்றும் சிறந்த வாழ்க்கை வாழும் வழியைக் கண்டறியலாம். இந்த மீட்டிங்குகளில், மற்ற அடிக்டுகள் தங்களை சுத்தமாக வைத்திருக்கவும், மற்றவர்கள் சுத்தமாக இருக்க உதவவும் தங்கள் அனுபவத்தையும், தெம்பையும், நம்பிக்கையையும் பகிர்ந்து கொள்வதை நாம் கேட்கிறோம். ஒரு அடிக்ட் மற்றொரு அடிக்டுக்கு உதவுவதில் உள்ள குணமாக்கும் சக்திக்கு இணையானது எதுவும் இல்லை என்பதை நாம் கண்டோம்.

நாம் தவறாமல் மீட்டிங்களில் கலந்து கொள்ளும் பொழுது, நம்மை தொந்தரவு செய்யும் உணர்வுகள் நம்மை விட்டு வெளியேற தொடங்குகின்றன என்பது எங்களது அனுபவமாகும். அவற்றிற்கு பதிலாக நார்காடிக்ஸ் அனானிமஸின் மூலம் நாம் கண்டறிந்த புதிய வாழ்க்கை முறையில் கிடைத்த நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் நன்றியுணர்வு போன்ற உணர்வுகளால் அவை மாற்றப்படுகின்றன. மிகமுக்கியமாக, நமது மீட்டிங்களுக்கு தொடர்ந்து வருபவர்கள் தொடர்ந்து சுத்தமாக இருப்பார்கள்.

## ஹோம் குருப்

ஒரு ஹோம் குரூப்பை தேர்ந்தெடுப்பதும் ஆதரிப்பதும் நலமடைதலின் முக்கிய பகுதியாகும்.ஒரு ஹோம் குருப் என்பது நீங்கள் வசதியாக இருக்கும் ஒரு மீட்டிங் ஆகும், நீங்கள் தவறாமல் கலந்து கொள்வீர்கள். நாங்கள் இதை எங்கள் ஹோம் குருப் என்று அழைக்கிறோம், ஏனென்றால் நாங்கள் பொருந்தக்கூடிய மற்றும் சொந்தமான இடத்தை இது குறிக்கிறது. ஒரு ஹோம் குரூப்பை கொண்டிருப்பது எங்களை ஒவ்வொரு வாரமும் நங்கூரமிட்டுக் பலப்படுத்தி கொள்ள அனுமதிக்கிறது, அங்கு நாங்கள் மற்றவர்களை பற்றி அறிந்து கொள்ள முடியும், மேலும் அவர்கள் நம்மையும் தெரிந்துகொள்ள முடியும். நாம் ஒன்றிணைந்து வளரும்போது ஒருவருக்கொருவருக்கான ஒரு பிணைப்பை வளர்த்துக் கொள்கிறோம்.

நாம் நமது ஹோம் குரூப்பில் ஒரு பொறுப்பை எடுத்துக் கொள்கிறோம். ஏதோ

ஒரு காரணத்திற்காக நாம் வரவில்லை என்றால் அவற்றை நாம் தவறவிடுகிறோம். நமது ஒவ்வொரு சுத்தமான வருடத்தை கொண்டாடும் இடமும் நமது ஹோம் குரூப் ஆகும். நாம் உண்மையான நண்பர்களை வளர்த்துக் கொள்கிறோம், பெரும்பாலும் நம் வாழ்வில் முதல் முறையாக, ஒருவருக்கொருவர் மதிக்க கற்றுக்கொள்கிறோம். நமது நலமடைதலில் இது மிகவும் முக்கியமானது.

உறுப்பினர்கள் பக்குவமடையும் பொழுது, குழுவும் கூட பக்குவமடைகிறது. நமது எல்லா விவகாரங்களிலும் நார்காடிக்ஸ் அனானிமஸின் ஆன்மீக தத்துவங்களை பின்பற்ற கற்றுக்கொள்கிறோம். குழுவின் வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுக்கான பொறுப்புகளை பிரிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் கற்றுக் கொள்கிறோம்.

ஹோம் குரூப் உறுப்பினர்கள் தங்கள் குழு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அல்லது சிரமங்களைப் பற்றி விழிப்புடன் இருக்க முயற்சிக்க வேண்டும் மற்றும் உதவ தயாராக இருக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக NA ஐ பாதிக்கும் விஷயங்கள் மற்றும் உங்கள் ஹோம் குருப்பின் நல்வாழ்வு தொடர்பான விஷயங்களில் குழுவின் ஒருமித்த கருத்துக்கு ஒரு உறுப்பினராக நீங்கள் வாக்களிக்கும் இடம் ஹோம் குருப் ஆகும். நலமடைதலின் செய்தியை ஏரியா மட்டத்தில் கொண்டு செல்வதில் ஹோம் குருப்புகள் பங்கேற்கின்றன. ஒற்றுமையின் உணர்வில், ஒற்றுமையே நோக்கமாக, ஒட்டுமொத்த NA இன் நன்மைக்காக, நாம் அனைவரும் நம் பங்கைச் செய்வது முக்கியம்.

## ஒரு குழுவின் உருவாக்கம்

ஒரு குழுவைத் தொடங்கும்போது தொடர்ந்து சந்திக்கும் இடத்தை தேர்ந்தெடுப்பதற்கு முதல் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.[1] நலம் அடைவதற்கான சூழலுக்கு உகந்த மற்றும் மீட்டிங் வளர வாய்ப்புள்ள வசதியான ஒரு இடத்தை பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். குழு ஆறாவது கோட்பாட்டை கடைப்பிடிக்க கூடிய ஒரு இடத்தை கண்டுபிடிப்பது முக்கியம், இது கூறுகிறது, "NA குழு தனது ஆதரவு, நிதி மற்றும் வின் பெயர் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட எந்த ஒரு அமைப்பிற்கோ அல்லது வெளி நிறுவனங்களுக்கோ கண்டிப்பாக கொடுக்ககூடாது. பணம், சொத்து, புகழ் போன்றவை நமது அடிப்படை நோக்கத்திலிருந்து நம்மைத் திருப்பிவிடும்." எதனுடனும் இணைக்கப்படாத இந்த கோட்பாடு குழு தனது சொந்த சுயாட்சியை உருவாக்கி கொள்ள அனுமதிக்கிறது. இருப்பிடத்தைப் பெற்ற பிறகு, வாரத்தின் நாளையும் நேரத்தையும் நிர்ணயம் செய்யுங்கள், மீட்டிங் இடத்தைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யுங்கள், வேறு ஏதேனும் அவசியமானால் அதனையும் ஏற்பாடு செய்யுங்கள். ஏழாவது கோட்பாடு நமக்கு சொல்கிறது "ஒவ்வொரு NA குழுவும் வெளியாரின் பங்களிப்பை மறுத்து கண்டிப்பாக முற்றிலும் சுய ஆதரவுடனேயே இயங்க வேண்டும்." ஏழாவது கோட்பாடுக்கு ஏற்ப, வாடகை செலுத்துவதற்கான வழியை உருவாக்குங்கள்; NA குழுக்கள் எப்போதும் சுயஆதரவாக இருக்க வேண்டும். குழுவின் பொறுப்புகள் (மீட்டிங் இடத்தை திறத்தல், சுத்தம் செய்தல், காபிக்கு ஏற்பாடு செய்தல், NA நூல்களை வழங்குதல், போன்றவை) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடிக்டுகளால் இந்த வேலைகள் சிறப்பாக பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. மீட்டிங் நடக்கும் இடத்தின் வசதியை சரிவர பராமரிக்க தவறியதால் சில குழுக்கள் தங்கள் மீட்டிங் நடக்கும் இடத்தை இழந்துவிட்டன. ஆனால் நாம் பயன்படுத்தும் அந்த அறையை மீட்டிங்குக்கு நடப்பதற்கு முன்பு இருந்ததை விட மீட்டிங் முடிந்த பின் சிறப்பாக வைத்திருந்தால், நலம் அடைதலின் சூழலையும் மற்றும் நார்காடிக்ஸ் அனானிமஸின் நற்பெயரையும் நாம் பாதுகாக்கிறோம்.

ஆரம்பத்தில் மீட்டிங் மந்தமாக இருந்தால், பொறுமையாக இருங்கள். அனுபவம் அது வளரும் என்பதை நிரூபிக்கிறது. அருகிலுள்ள ஏரியா அல்லது பிராந்தியக் குழுக்களை தொடர்புகொள்வதன் மூலமும், பிற கூட்டங்களில் அறிவிப்பதின் மூலமும், துண்டு பிரசுரங்களை விநியோகிப்பதன் மூலமும் மற்றவர்களின் ஆதரவை உருவாக்க முடியும்.

போதுமான பங்கேற்பு மற்றும் ஆதரவு இருக்கும்போது, ஒரு குழுவின் பிசினஸ் மீட்டிங் நடத்தப்படுகிறது. இந்த முதல் மீட்டிங்கில், குழுவின் விஷயங்கள் முறைப்படுத்தப்படுகின்றன (பெயர், நடத்தும் விதம் போன்றவை) மற்றும் நம்பிக்கை

[1] ஒரு NA குழுவை உருவாக்குவது பற்றிய மேலதிகத் தகவலுக்கு, *The Group Booklet* ஐப் பார்க்கவும் (தமிழில் இன்னும் வெளியிடப்படவில்லை).

பெற்ற தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இந்த கட்டத்தில் குழு மிகவும் வியாபாரரீதியானதாகத் தோன்றினாலும், நமது முதன்மை நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான அடித்தளத்தை நாங்கள் அமைத்து கொண்டுவருகிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். NA ஐ அக்கறையுடன் கவனித்து, நமது நலமடைதலுக்கு முதலீடு செய்வது குழு உறுப்பினர்களாகிய நமது பொறுப்பு. நமது ஹோம் குரூப்பில் பங்கேற்பது உண்மையிலேயே நமது பாக்கியம்.

## நம்பிக்கை பெற்ற தொண்டர்கள்

நமது இரண்டாவது கோட்பாடு சொல்கிறது: "நமது குழுவின் நோக்கத்திற்கு இறுதியான அதிகாரி அன்பான இறைவனே, நமது குழுவின் மனசாட்சியின் மூலமாக இறைவன் தன்னை வெளிப்படுத்துவார். நமது தலைவர் கள் ஆளுமை செய்வதில்லை, மாறாக அவர் கள் நம்பிக்கைப் பெற்ற தொண்டர்கள்." எனவே, நமது நம்பிக்கை பெற்ற தொண்டர்கள் குழுவின் முதுகெலும்பாக இருக்கிறார்கள், எல்லா மீட்டிங்குகளிலும் அவர்கள் தவறாமல் கலந்துகொள்வது மிகவும் முக்கியமானது. பல NA குழுக்கள் பாதிக்கப்படுவதற்கோ அல்லது முடங்கி போகக்கூடிய படுகுழிகளில் ஒன்று சேவை செய்ய தகுதியற்ற அல்லது நமது சங்கத்தில் இருக்கும் நலமடைதலில் சேவை அனுபவம் இல்லாத பணியாளர்களை தேர்ந்தெடுப்பது ஆகும். பெரும்பாலும் NA தேர்தல்கள் - நம்பிக்கை பெற்ற தொண்டர்களை தேர்ந்தெடுப்பதை விட பிரபலமானவர்களை தேர்ந்தெடுக்கும் போட்டிகளாக தோன்றுகின்றன. ஒரு குழுவின் தகுதியான சேவகர்கள் தங்கள் அலுவலகங்களின் பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுவார்கள் மேலும் மோசமான சேவகர்களால் குழுவில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் எனவே குழுவின் சேவகர்களை மிகுந்த கவனத்துடன் தேர்தெடுக்க வேண்டும். சேவை செய்வதற்கான பொறுப்புகளை நிறைவேற்றுவது முக்கியம். பின்வரும் பத்திகளில் குழுவின் நம்பிக்கை பெற்ற தொண்டர்களை பற்றி சுருக்கமான விளக்கம் உள்ளது மேலும் விரிவான விளக்கத்திற்கு, அங்கீகரிக்கப்பட்ட NA சேவையின் கையேட்டைப் பார்க்கவும். NA குழுவைத் தொடங்குவது பற்றிய கூடுதல் தகவலுக்கு, குழுவின் கையேட்டைப் பார்க்கவும்.



ஒரு பொது வழிகாட்டியாக, நம்பிக்கை பெற்ற தொண்டர்கள் தங்கள் பொறுப்புகளின் செயல்திறனுக்குத் தேவையான சில திறமைகளை வைத்திருந்தால் அவர்கள் மிகவும் வெற்றிகரமானவர்கள் என்பதைக் கண்டறிந்துள்ளோம். இந்த தகுதிகள் பின்வருமாறு:

1. சேவை செய்ய தயாராக இருப்பதும் மற்றும் விருப்பம்
2. NA இல் நலமடைந்து கொண்டிருக்கும் காலம் (குறைந்தபட்சம் ஒரு வருடம் சுத்தமான நேரத்தை நாங்கள் பரிந்துரைக்கிறோம்)
3. NA இன் பன்னிரண்டு வழிமுறைகள் மற்றும் பன்னிரண்டு கோட்பாடுகள் பற்றிய புரிதல் மற்றும் செயல்படுத்தும் அறிவு
4. குழுவில் தீவிரமாக பங்கேற்பது

### செயலாளர்

செயலாளரின் பொறுப்புக்கள் பின்வருபவை:

★ எதுவாக இருந்தாலும் மீட்டிங்கை தவறாமல் திறப்பது மற்றும் மூடுவது
★ NA செய்தியான நலம் அடைதலை எடுத்து செல்லும் ஒருவரை தலைமை தாங்க தேர்ந்தெடுப்பது
★ காபி பரிமாறுவதை உறுதி செய்தல்
★ கூட்டத்தின் விவரங்களை பதிவு செய்து வைத்திருத்தல்
★ குழுவின் பிசினஸ் மீட்டிங்களுக்கு ஏற்பாடு செய்தல்
★ பொருட்களையும் நூல்களையும் வாங்குதல் மற்றும் விநியோகம் செய்தல்

இத்தகைய பெரிய பொறுப்பை செயலாளர் செய்யவேண்டி உள்ளதால் இந்தப் பதவியை எளிதாக எடுத்துக் கொள்ள கூடாது. ஹோம் குரூப் உறுப்பினர்கள் அவர் உதவி கேட்கும் பொழுது அவருக்கு உதவ விருப்பத்துடன் தயாராக இருக்க வேண்டும்.

### பொருளாளர்

பொருளாளரின் பொறுப்புக்கள் பின்வருபவை:

★ குழுவின் கட்டணங்களை செலுத்துதல்

★ வரவு செலவு பதிவுகளை வைத்திருத்தல்

★ வரவு செலவிற்கான குழுவின் ஒருமித்த முடிவுகளை மேற்கொள்வது

★ குழுவிற்கு வழக்கமான அறிக்கைகளை வழங்குதல்

பொருளாளர் அடிப்படை கணித திறன்களை கொண்டிருப்பதும் மற்றும் அவருடைய தனிப்பட்ட நிதிகளை சரியாக நிர்வகிப்பதும் இதற்கு உதவியாக இருக்கும். நாங்கள் எதிர்கொண்ட மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்று குழுவின் பணத்தை தவறாகப் பயன்படுத்துவதாகும். தேவையான பணத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்கள் மறைந்துவிட்டன. இந்த துஷ்பிரயோகம் வரம்புக்குட்பட்டது மட்டுமல்ல நார்காடிக்ஸ் அனானிமஸ் என்ன செய்ய முடியும் என்பதை காட்டுகிறது, நமது ஐந்தாவது கோட்பாட்டை நிலைகுலைய வைக்கிறது. அதில் நாம் படிப்பது, "இன்னமும் அடிக்சனால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு NA - வின் செய்தியை தெரியப்படுத்துவதே ஒவ்வொரு குழுவின் அடிப்படை நோக்கமாகும்." தங்கள் பதவிகளை துஷ்பிரயோகம் செய்த பொருளாளர்கள் பொதுவாக அவர்களுடைய தனிப்பட்ட நலமடைதலில் அதற்கு அவர்கள் செலுத்தும் விலை மிகவும் மோசமானதாக இருப்பதை காணலாம். வெளிப்படையாக, பொருளாளருக்கு ஒரு பெரிய பொறுப்பு உள்ளது மற்றும் இந்த செயல்பாட்டை செய்ய வேண்டியிருப்பதால் ஒரு உறுப்பினரை நிறைய யோசித்து தேர்ந்தெடுக்க வேண்டும். குழு பொருளாளராக பணியாற்றுவது பற்றிய கூடுதல் தகவலுக்கு, NA மாநாட்டால் அங்கீகரிக்கப்பட்ட *Treasurer's Handbook*[2] ஐப் பார்க்கவும்.

## குழுவின் சேவை பிரதிநிதி (GSR)

குழுவின் சேவை பிரதிநிதியின் பொறுப்புகள் பின்வருபவை:

★ ஏரியா சேவை கமிட்டியின் (ASC) கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்வது

★ ASC ன் சப் கமிட்டிகளில் உறுப்பினராக பணியாற்றுதல்

★ குழுவிற்கும் ஏரியாவிற்கும் இடையில் ஒரு தொடர்பாளராக பணியாற்றுதல்

★ குழுவின் மாற்று சேவை பிரதிநிதியுடன் பொறுப்புகளைப் பகிர்தல்

★ குழுவை உலக சேவை அலுவலகத்தில் துல்லியமாக பதிவுசெய்தல்

இந்த பதவியின் மிக முக்கியமான அம்சம் குழுவிற்கான செய்தி தொடர்பாளராக இருக்க வேண்டும். குழு சேவை பிரதிநிதி என்பது குழுவிற்கும் சங்கத்திற்கும் இடையிலான முக்கிய இணைப்பாகும். GSR என்பவர் முறையான செய்தி தொடர்பாளர் இவரின் நோக்கம் மற்ற குழுக்கள் அல்லது NA வை ஒட்டுமொத்தமாக பாதிக்கும் விஷயங்களில் குழுவின் ஒருமித்த கருத்தை பிரதிநிதித்துவ படுத்துவதாகும். இந்த கடமைக்கு உலகளாவிய NA சங்கத்தின் முன்னேற்றங்கள் குறித்து குழுவிற்கு தகவல்களை வழங்கவும், குழுவின் எந்தவொரு செயல்பாடுகள், பலங்கள் அல்லது பிரச்சினைகள் குறித்து ஏரியாவுடன் பகிர்ந்து கொள்ளவும் இத்தகைய கடமைகளை ஆற்ற ஒரு பிரதிநிதி தேவை.

## குழுவின் மாற்று சேவை பிரதிநிதி

### (GSR – மாற்று)

GSR - மாற்று பதவி GSR க்கு இணையானது, இது இரண்டு வருடத்திற்கான பொறுப்பாகும், முதல் ஆண்டு பயிற்சியிலும், இரண்டாம் ஆண்டு GSR ஆகவும் செயல்பட வேண்டும். மாற்று GSR ஒவ்வொரு ASC மீட்டிங்களிலும் கலந்துகொண்டு GSR ரிடமிருந்து கற்று கொள்வதும் மற்றும் அவருக்கு ஆதரவு அளிப்பதும் கட்டாயமாகும். GSR இல்லாத நிலையில் மாற்று GSR, GSR ஆக செயல்படுவார்.

## சேவை செய்வதற்கான கூடுதல் வழிகள்

முன்னர் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக நம்பிக்கை பெற்ற தொண்டர்கள் திட்டவட்டமான சேவை விதிமுறைகளுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பேச்சாளராக அல்லது தலைமை தாங்க கூடியவர்களாக நாம் மற்ற வழிகளிலும் சேவை புரியலாம்; நம்பிக்கை பெற்ற தொண்டர்களாகிய இவர்கள் பொதுவாக குழு செயலாளரால் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த உலகளாவிய சங்கம் முழுவதும் ஏராளமான விதிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன மற்றும் மீட்டிங்குகளை நடத்துவதற்கான பல்வேறு வழிகள் இருக்கின்றன. இந்த விஷயங்கள் மற்ற குழுக்கள் அல்லது NA வையோ ஒட்டுமொத்தமாக பாதிக்காத வரை நமது நான்காவது கோட்பாடு நமக்கு சுயாட்சியை உறு-

[2] தமிழில் இன்னும் வெளியிடப்படவில்லை.

திப்படுத்துகிறது. இவைகள் நமது சங்கத்தை வளமாக்குகிறது மற்றும் நமது செயல்திறனை அதிகரிக்கிறன. எப்போதுமே நமது முதன்மை நோக்கம் இன்னும் போதைப்பொருட்களை பயன்படுத்திக் கொண்டு அவதியுறும் அடிக்டுகளுக்கு நமது நலமடையும் செய்தியை எடுத்துச் செல்வதாகும்.

## தலைமை தாங்குபவர் / தலைவர்

பல இடங்களில் தலைவர் என்றும் அழைக்கப்படும் தலைமை தாங்குபவர் நார்காடிக்ஸ் அனானிமஸ் மீட்டிங்களுக்கு தொடர்ந்து வந்து நம்பிக்கை தெம்பு அனுபவம் ஆகியவற்றை பகிர்ந்து கொண்டவராக இருக்க வேண்டும் விவாதங்களை சுமுகமாக நடத்துவதற்கும் மற்றும் அந்த குழுவின் விதிமுறைகளுக்கு உட்பட்டு குழுவை நடத்துவதற்கு இந்த நபர் பொறுப்பாவார். இது அனைவருக்கும் சொந்தமான மீட்டிங் என்பதை தலைமை தாங்குபவர் கவனத்தில் கொள்ள வேண்டும் மற்றும் ஒவ்வொரு நபரின் பகிர்தலுக்கு பிறகு அதைப்பற்றி கருத்து தெரிவிக்க கூடாது.

அந்த மீட்டிங்கில் நலமடையும் சூழலை ஏற்படுத்துவது தலைமை தாங்குபவரின் பொறுப்பாகும். அடையாளம் காண்பதற்கு பிரச்சினைகளை பகிர்வது அவசியம் என்றாலும், நலமடைவதற்கு தீர்வுகளைப் பகிர்வதும் அவசியம். நாம் சுத்தமாக இருப்பதற்கும், அடிக்சனிலிருந்து விடுபட்டு நலமடைய பிற அடிக்டுகளுக்கு உதவுவது போன்ற குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நாம் இங்கு வந்துள்ளோம் என்பது எப்போதும் தலைமை தாங்குபவரின் மனதில் இருக்க வேண்டும்.

## பேச்சாளர்

மீட்டிங்குகளில் பேசுவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் NA உறுப்பினர் NA செயல் திட்டத்தில் உள்ள பன்னிரண்டு வழிமுறைகளையும் பன்னிரண்டு கோட்பாடுகளையும் செயல்படுத்தி அதன்படி வாழ்ந்து வருபவராக இருக்க வேண்டும். கணிசமான காலம் சுத்தமாக இருக்கும் NA உறுப்பினர்கள் அல்லது பன்னிரண்டு வழிமுறைகள் மற்றும் பன்னிரண்டு கோட்பாடுகள் இவற்றில் போதிய அனுபவம் உடைய NA உறுப்பினர்கள் பலர் இல்லாத ஏரியாக்களில் நார்காடிக்ஸ் அனானிமஸில் அனுபவமற்ற ஒரு குழு NA கோட்பாடுகளை தவறாகப் புரிந்துகொண்டு NA விற்கு வெளியில் இருந்து பேச்சாளர்களை அழைக்க வாய்ப்புள்ளது. இந்த சூழ்நிலையைத் தவிர்க்க பல வழிகள் உள்ளன. உதாரணமாக, நமது பேசிக் டெக்ஸ் கூறுவதுபோல, பிற பகுதிகளைச் சேர்ந்த NA உறுப்பினர்கள் புதிய குழுக்களை ஆதரிக்க நீண்ட தூரத்தில் இருந்தும் வருவதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. குழுவின் முதன்மை நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் நலமடையும் செய்தியை இன்னும் போதைப்பொருட்கள் பயன்படுத்துவதால் அவதியுறும் அடிக்டுகளுக்கு எடுத்து செல்வதற்கு இந்தப் பேச்சாளர் உதவுகிறார். ஒரு NA மீட்டிங்கில் பேசும்பொழுது நலமடைந்து வரும் அடிக்டுகளாக நாம் நம்மை அடிக்டு என்று அடையாளப் படுத்தி கொள்வதன் மூலம் நலமடைவதற்கான தெளிவான செய்தியை வழங்குவதற்கு நாம் கவனமாக இருக்க வேண்டும். நமது போதைப்பொருட்கள் பயன்படுத்திய காலங்கள் அல்லது “போராட்ட கதைகள்” பற்றியோ அதிகமாகப் பேசுவது அவசியமில்லை, ஏனென்றால் அவற்றைப் பயன்படுத்தினால் என்ன நடக்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். போதைப் பொருட்கள் பயன்படுத்துவதை நிறுத்துவதற்காக நாங்கள் நார்காடிக்ஸ் அனானிமஸிக்கு வந்தோம், நமது அனுபவம், தெம்பு மற்றும் நம்பிக்கை இவற்றை பகிர்ந்து கொள்ளவே நாங்கள் இங்கு வந்துள்ளோம்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

நமது ஏரியாக்களில் புதிதாக துவங்கப்பட்ட நமது குழுக்களுக்காக: வழிமுறைகள் மற்றும் நமது நூல்களை கற்பதற்கான மீட்டிங்குகள் நமது உறுப்பினர்களின் ஆரம்பகால வளர்ச்சிக்கு மிக முக்கியமானது என்பதை நாம் கண்டறிந்தோம். அன்பு மற்றும் சங்கத்துடன் இணைந்து உங்களால் முடிந்ததைச் செய்ய நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம், மேலும் தொடர்ந்து வந்து கொண்டே இருங்கள்: இது செயல்படுகிறது!

**NA வழியில்
நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து
கொள்ளும் பொழுதும்
மற்றும் அக்கறை கொள்ளும் பொழுதும்
நமது நன்றி உணர்வு வெளிப்படுகிறது**

Copyright © 2020 by
Narcotics Anonymous World Services, Inc.
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

World Service Office
PO Box 9999
Van Nuys, CA 91409 USA
T 818.773.9999
F 818.700.0700
Website: www.na.org

World Service Office–CANADA
Mississauga, Ontario

World Service Office–EUROPE
Brussels, Belgium
T +32/2/646 6012

World Service Office–IRAN
Tehran, Iran
www.na-iran.org

இது NA ஃபெலோஷிப் அங்கீகாரம்
பெற்ற உரையின் மொழிபெயர்ப்பு.

Narcotics Anonymous, , , , The NA Way
ஆகியவை Narcotics Anonymous World Services,
Incorporated இன் பதிவுபெற்ற வர்த்தகசின்னங்கள்

ISBN 9781633803039 Tamil 9/20

WSO Catalog Item No. TA3102